**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**<u>அவசரக் கூட்டப்பொருள்</u>**

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>பொருள்கள்</u>**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| **11.07.11** | **1.** இம்மாநகராட்சிக்கு 13வது நிதிக்குழு நிதி திட்டத்தின் (2010–2011 முதல் 2014–2015 வரை) ரூ. 9581069/– (ரூபாய் தொன்னூற்றி ஐந்து லட்சத்து எண்பத்தொன்றாயிரத்து அறுபத்தொன்பது மட்டும்) முதல் தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண். 306 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09–12–2010ல் கீழ்க்கண்ட முன்னுரிமை அடிப்படையில் நிதியினை செலவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>1. உள்ளாட்சி அமைப்பினால் பாதாள சாக்கடை திட்டத்திற்கு TWAD போர்டுக்கு பங்குத் தொகையினை செலுத்துதல்.<br>2. உள்ளாட்சி அமைப்புக்கான மின்சார கட்டணம்<br>3. உள்ளாட்சி அமைப்பினால் TWAD போர்டுக்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம்<br>4. தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு<br>இம்மாநகராட்சியின் பங்கு தொகையாக பாதாள சாக்கடை திட்டத்திற்கு நிதி எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை. எனவே இம்மாநகராட்சியின் மின்கட்டணம் மற்றும் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகளுக்கு நிதியினை செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம். இ1 / 11336/2011 | 388) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களுக்கு கணிணி கல்வி வழஙகும் பொருட்டு இம்மாநகராட்சியின் கீழ்க்கண்ட பள்ளிகளுக்கு சுமார் **40** கணிணி (மேஜை கணிணி) (Desk Top) வாங்க ரூ. 20 லட்சத்திற்கு மாமன்றம் தனது தீர்மானம் எண். 366 நாள் 11–07–2011ல் அனுமதி வழங்கியுள்ளது.<br><br>**1.** சாமுவேல்புரம் பள்ளி **2.** சிவந்தாகுளம் பள்ளி **3.** ஜின்பாக்டரி பள்ளி<br>4. தெற்கு புதுத்தெரு பள்ளி 5. மேலூர் பள்ளி 6. சண்முகபுரம் பள்ளி<br>7. எஸ்.எஸ்.தெரு பள்ளி<br><br>மேற்கண்ட பள்ளிகளுக்கு 40 கணிணி வாங்கி வழங்கும் போது அதனை பள்ளிகளில் பயன்பாட்டிற்கு அமைத்து கொடுக்க தேவையான மின் கட்டமைப்புகளை ஏற்படுத்த உத்தேச செலவினம் ரூ. 1 லட்சத்திற்கும், 40 கணினிகளை வைத்து பயன்படுத்த மேஜை மற்றும் சுழல் நாற்காலி வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ 3.60 லட்சமும் மொத்தம் ரூ 4.60 லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு .** அனுமதிக்கலாம். மேலும் மேஜை மற்றும் சுழல் நாற்காலிகள் TANSI நிறுவனத்திலிருந்து வாங்க அனுமதிக்கலாம்.<br><br>இ1/9995/2011 | 389) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. இம்மாநகராட்சி பகுதி வார்டு 30ல் அமைந்துள்ள அருள்மிகு சங்கரராமேஸ்வரர் திருக்கோயில் வடக்கு பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அகற்றக்கோரி திரு. M.A.சுதாகர் என்பவரால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இம்மாநகராட்சியை **1**ம் பிரதி வாதியாக சேர்த்து தாக்கல் செய்த O.S.No. **353/2007** தொடர்பாக **22–11–2010**ல் நடைபெற்ற விசாரணையில் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் CRP.PD (M.D.)No. 1091/2011 , 1092/2011 என்ற வழக்கு எண்களில் சீராய்வு மனு தாக்கல் செய்து தடை உத்திரவு பெற்றுள்ளார்.<br><br>இதில் இம்மாநகராட்சியை 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சி தரப்பில் ஆஜராக மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை அவர்களிடம் இவ்வழக்கினை ஒப்படைக்கவும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>சி5/9992/2011 | 390) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சண்முகபுரம் மாநகராட்சி பள்ளியில் முதல் தளத்தில் நூலக கட்டிடம் அமைக்கும் பணி கல்வி நிதியில் செய்ய 29–06–2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண். 343 தேதி 30–05–2011ல் ரூ. 1800000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது. | 391) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | திரு எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டிற்கு 4.93% அதிகம் (ரூ.1400735.38) — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>திரு.ஐ. ஜெயசீலன் ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டிற்கு 4.90% அதிகம் (ரூ.1400279.86) — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>திரு.கே. வேலாயுதம் ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டிற்கு 4.12% அதிகம் (ரூ.1389830) — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>திரு.வி. தங்கராஜ் ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டிற்கு 5.16% அதிகம் (ரூ.14003714) — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு **4.12%** அதிகமானதுமான திரு. கே. வேலாயுதம் அவர்களிடமிருந்து விலை குறைப்பு கேட்கப்பட்டது. இதில் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டைவிட **4** சதவிகிதம் அதிகமாக (ரூ. **1388270/–)** கொடுத்துள்ளார். எனவே தற்போது **2011–2012**ல் விலைப் பட்டியலின்படி பார்த்தால் சுமார் 7 முதல் **8** சதவிகிதம் அதிகமாக ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் மாநகராட்சிக்கு இழப்பு எற்பட வாய்ப்புள்ளதால் அவசர அவசியத்தை முன்னிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு கே. வேலாயுதம் அவர்கள் மதிப்பீட்டை விட **4%** அதிகம் (ரூ. **13,88,270/–)** கொடுத்துள்ளதை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br><br>ம.ப.எண். 12/2011 –12 | |
| | 5. இம்மாநகராட்சி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான குடிநீர் மூன்று எண்ணம் பைப் லைன்களில் வல்லநாடு தலைமை பணயிடத்தில் இருந்து இராஜாஜி பூங்கா நீரேற்றும் நிலையத்திற்கு வந்து சேர்கிறது. இங்கு வரும் நீர் அளவை சரியான முறையில் அளவிட தேவையான வாட்டர் ப்ளோ மீட்டர் எந்த ஒரு பைப் லைனிலும் இல்லை.<br><br>இராஜாஜி பூங்காவிற்கு வரும் குடிநீர் 5 பிரிவுகளாக பிரிந்து தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் விழுகிறது. இந்த ஐந்து பைப் லைனிலும் வாட்டார் ப்ளோ மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அதற்கு உத்தேசமாக ஆகும் தோராய செலவுச் தொகை ரூ **1050000/–**க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் குடிநீர் விநியோக நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/09743/2011 | 392) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சியின் பழைய எல்லைப் பகுதியுடன் புதிதாக **1)** தூத்துக்குடி ரூரல், **2)** சங்கரப்பேரி **3)** மீளவிட்டான் **4)** முத்தையாபுரம் **5)** அத்திமரப்பட்டி, ஆகிய ஐந்து ஊராட்சிகளின் எல்லைகளை இணைத்து ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சி பகுதிகளின்படி **2011** உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் தொடர்பான பணிகளுக்கு உத்தேச செலவினம் ரூ **25** லட்சங்கள் ஆகும் என்பதால் | 393) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இச்செலவினைத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் பின்னர் அரசிடமிருந்து தொகைகள் பெறப்படும் பட்சத்தில் இதனை ஈடு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். சி**1/6001/11** | |
| | 7. இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட லாரி வாகனங்கள்<br><br><u>வண்டி எண் வாங்கிய வருடம்</u><br><br>TN69-2293 – 1990<br>TN69-5719 - 1991<br>TN69-5720 - 1991<br><br>வாங்கி 20 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இதனால் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகின்றது. பழுதை சரி செய்தாலும் சீரான இயக்கம் இல்லை. எனவே இதனை அரசாணைப்படி கழிவு நீக்கம் செய்திடவும் பின்னர் பொது ஏலம் மூலம் விடுவது அவசியமாகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதியை பெற்று புதிய வாகனம் வாங்கிடவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**அலவலக குறிப்பு**<br><br>1) அரசு விதி முறைகள்படி உரிய துறைகள் அனுமதி பெற்று கழிவு நீக்கம் செய்திடவும் பொது ஏலத்தில் விடவும் அனுமதிக்கலாம்.<br><br>2) நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று புதிய வாகனங்கள் வாங்கிடவும் இதற்கான செலவினத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.<br><br>3) மேற்கண்ட செலவினம் 2011–2012ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்கலாம்.<br><br>4) தற்சமயம் நிதிநிலையை கருத்தில் கொண்டு 2 எண்ணம் மட்டும் வாங்கலாம். மேலும் தற்போது மாநகராட்சியுடன் ஊராட்சிகள் இணைப்பதால் வண்டிகளின் அவசர அவசியம் கருதி ரூ 40.00லட்சம் செலவு அனுமதிக்கலாம்.<br><br>இ5/10630/11 | 394) அலுவலகக் குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது |
| | 8. இம்மாநகராட்சி பகுதி வார்டு **1** எட்டையாபுரம் ரோடு கதவு எண். **109/5**டி போல்பேட்டையில் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கட்டிடத்திற்கு நியாய வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரியை **(1–4–2001** முதல்**)** எதிர்த்து தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் C.M.A.5/2006 என்ற வழக்கு எண்ணில் இம்மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு தொடர்பான 16–9–2010ம் தேதிய உத்திரவில் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>அதன்பேரில் மாநகராட்சி தரப்பில் 1996–97 முதல் 2011ம் ஆண்டு வரை உள்ள நிலுவைத்தொகை ரூ 46,88,849/–ஐ செலுத்தக்கோரி அனுப்பப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் மேற்படி வங்கியின் | 395) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தனிஅலுவலர் மூலம் W.P.(M.D)NO. 7873/2011 மற்றும் W.P.(M.D)NO. 7874/2011 என்ற வழக்கு எண்களில் நகராட்சி நிர்வாக ஆணையரை 1ம் பிரதிவாதியாகவும் மாநகராட்சி ஆணையரை 2ம் பிரதிவாதியாகவும் வரிமேல் முறையீட்டு குழுவை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்குகளை அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைத்ததற்கும் இவ்வழக்கு தொடர்பான வழக்கறிஞர் கட்டணம் வழக்கு ஒன்றுக்கு தலா 7500/– வீதம் இரு வழக்குகளுக்கு ரூ.15000/– வழக்கறிஞர் கட்டணம் மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவவகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். சி5.11107/2011 | |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி வரிமேல்முறையீட்டுத் தீர்ப்பாய நீதிபதி அவர்களின் 15–6–2011ம் தேதிய கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அரசு ஆணை எண். 864 நாள் 5–10–2010ன் படி நீதிபதி அவர்களுக்கு (மூன்று வருடத்திற்கு ஒரு முறை) ரோப் அலவன்ஸ் ரூ 6000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு –** அனுமதி வழங்கலாம். அ18/8335/2011 | 396) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. இம்மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் பணிபுரிந்து வரும் திரு ச. சந்தணராஜ் (அலுவலக உதவியாளர்) அவர்கள் தான் மாற்று திறன் உடையவர்(உடல் ஊனமுற்றோர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொழில் வரியிலிருந்து (அரசு ஆணையின் படி) விலக்கு அளிக்குமாறு உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169– H (c) ன் படி மேற்படி திரு. ச. சந்தணராஜ் (அலுவலக உதவியாளர்) தூத்துக்குடி மாநகராட்சி என்பவருக்கு (அரசு ஆணையின்படி) 2011–2012 2ம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – அனுமதி வழங்கலாம். அ10/2468/09 | 397) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 11. இம்மாநகராட்சி பகுதி வார்டு 16 குரூஸ்புரம் கதவு எண் 195/பி. கட்டிடத்தின் உரிமையாளர் பெயர் சிந்தாதிரை பட்டங்கட்டியார் என்று உள்ளதை திரு. சிந்தாதிரை ஆரோக்கியம் செல்வின் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்துள்ளதை ஆட்சேபித்து திருமதி சந்திரா என்பவரால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இம்மாநகராட்சியை 1ம் பிரதிவாதியாக சேர்த்து O.S. No.213/2011 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>மேற்படி வழக்கினை இம்மாமன்ற வழக்கறிஞர் திரு. என். செல்வராஜ் அவர்களிடம் ஒப்படைக்கவும் வழக்கிற்கான செலவினத் தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம் சி5/9828/2011 | 398) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 12. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தரைமட்ட நீர்த்தேக்க நிலையம் (G.L.R.) வளாகத்தில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த நாவல்மரம் தற்போது ஆடிமாத சூறாவளி காற்றினால் வேரோடு சாய்ந்து விழுந்துவிட்டது. இதனால் அப்பகுதி சாலை போக்குவரத்து அடியோடு துண்டிக்கப்பட்டு விட்டது எனவே மேற்படி மரத்தினை அப்புறப்படுத்துவது அவசியம் மேலும் வளாகத்தில உள்ள பலாமரம் **1.** யூக்கலிப்டஸ் மரம் **2** ஆகிய மரங்கள் பழமை வாய்ந்தபடியால் பட்டுபோய் ஆபத்தான நிலையில் கீழே விழும் வண்ணம் உள்ளது. எனவே மேற்கண்ட மரங்களை அப்புறப்படுத்தும் பொருட்டு பொது ஏலம் விட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1) நாவல் மரம் — 1 எண்ணம்<br>2) யூக்கலிப்டஸ் மரம் — 2 எண்ணம்<br>3) பலாமரம் — 1 எண்ணம்<br>——————————<br>மொத்தம் — 4 எண்ணம்<br>——————————<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பொது மக்களின் நலன் கருதி கீழே சாய்ந்து விழும் அபாயம் கருதி ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>இ5/11612/2011 | 399) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13. தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் கணிணி மூலம் எல்லா கடித போக்கு வரத்துகளும் நடைபெறுவதால் தற்சமயம் தட்டச்சு இயந்திரங்கள் உபயோகப் படுத்தப்படாமல் 4 இயந்திரங்கள் **21–7–2011**ல் பொறியாளர் அவர்களால் பொது ஏலத்தில் விடப்பட்டது. பொது ஏலத்தில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள்.<br><br>**1)** திரு டி. சரவணக்குமார் — ரூ. **1950/–**<br><br>**2)** திரு. ஆர். மனோகரன் — ரூ. **2000/–**<br><br>ஏலத்தில் உச்ச கட்ட கேள்வியாக திரு. ஆர். மனோகரன் என்பவர் தொகை ரூ. **2000/–** ஏலம் கோரியுள்ளார். எனவே கூடுதலாக ஏலம் கேட்ட திரு. ஆர். மனோகரன் என்பவரின் ஏலக் கேள்வியைஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். இ5/15488/2010 | 400) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 14. இம்மாநகராட்சிக்கு சொந்தமான ரோச் பூங்காவில் பொழுது போக்கிற்காக வரும் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் அமர்வதற்கு தேவையான சிமெண்ட் பெஞ்ச்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் **130000/–** க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) மாமன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் சிறப்பினமாக கொண்டு அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண்.71/2011–2012 | 401) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 15. இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் துறை மூலம் 12 வார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.<br><br>40 டபுள்யு. குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள், எனர்ஜி சேமிப்பு விளக்குகள் என மொத்தம் 1250 ஆகும். அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவு கோல்படி மின்சாதன பொருட்கள் ஒரு ஆண்டுகால பராமரிப்பிற்கு செலவினம் ரூ 9 இலட்சம் ஆகும். இதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>39 வார்டுகள் தனியர் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் விவரம் வருமாறு<br><br>40டபுள்யு குழல் விளக்குகள் 5726<br><br>250டபுள்யு சோடியம் ஆவிவிளக்குகள் 875<br><br>150டபுள்யு மெர்க்குரி ஆவி விளக்குகள் 74<br><br>உயர்மின்கோபுர விளக்குகள் 10 ஆகும்<br><br>மேலும் மேற்படி பகுதியில் பாலத்தின் மீது புதியதாக பொருத்தப்பட்டு உள்ள 88 250 டபுள்யு மெட்டல் ஹைலைட்டு / சோடியம் ஆவி விளக்குகள் பராமரிக்கப்பட்டு வரவேண்டி உள்ளது. இதனையும் சேர்த்து ஓர் ஆண்டு செலவினம் ரூ 37 இலட்சம் ஆகும். மாமன்ற தீர்மான எண். 17 நாள் 04–01–2010ல் அங்கீகரிக்கப்பட்டு உள்ள விலைவிகிதப்படி பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங நிறுவனத்தின் மூலம் மேற்படி பகுதியில் பொருத்தப்பட்டுள்ள புதிய விளக்குகள் பராமரித்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –**<br><br>1) துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ. 9.00 இலட்சத்திற்கும் மேல் நடவடிக்கை தொடரவும் அனுமதிக்கலாம்.<br><br>2) தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ 37.00 இலட்சம் மற்றும் மேற்படி பகுதியில் பொருத்தப்பட்டு உள்ள புதிய விளக்குகள் பராமரித்து வரும் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கவும் அனுமதிக்கலாம்.<br><br>இ3/11609/2011 | 402) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 16. 2011 உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு தேர்தல் பணிகளுக்காக தற்காலிகமாக பணியாளர்களை நிரப்பிக்கொள்ள அரசு ஆணை எண்.(டி) 260– நகராட்சிகளின் நிர்வாகம் (ம) குடிநீர் (தேர்தல்) வழங்கு துறை நாள் 14–7–2011ல் அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>இந்த அரசு ஆணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் தற்காலிகமாக நிரப்பப்படும் பணியிடங்களால் ஏற்படும் கூடுதல் செலவுச் தொகைகள் இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவுகள் செய்திட அனுமதி வேண்டப்படுகிறது. | 403) அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது அலுவலகக்குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு** – **1)** அரசு ஆணை பதிவு செய்யலாம்<br><br>2)கூடுதல் செலவுச் தொகைகள் இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்துசெலவுகள் செய்திட அனுமதிக்கலாம்.<br>**சி1/6001/2011** | |
| | 17. இம்மாநகராட்சி பொன் விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் **2011–12**ம் ஆண்டுக்கு ரூ **707879/–** க்கு உத்தேச மதிப்பீட்டில் பணிகள் எடுத்து செய்ய பிரேரணை சமர்ப்பிக்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். **12919/11/**UPA**–2** நாள் **16–06–2011**ல் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சி மாதவநாயர் காலனியில் பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ **8.90** லட்சம் மதிப்பீட்டில் சிமிண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடுதயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை எடுத்து செய்யவும், பணிக்கு அனுமதிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக செலவு செய்யப்படும் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். ஏற்கனவே பொது நிதியிலிருந்து இப்பணியினை எடுத்து செய்ய வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்து பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்பு திட்ட நிதியில் செய்யவும் அனுமதிக்கலாம்.<br><br>இ1/11502/2011 | 404) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 18. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் நீர் உறிஞ்சி கிணறு குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் அமைக்கும் பணிக்கு **24–06–2011** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்படவில்லை. எனவே **13–07–2011** அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண். **342** தேதி **30–05–2011**ல் ரூ. **4000000/–** க்குஅனுமதி வழங்கியுள்ளது.<br><br>1) திரு P.M. ஹமீது ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டிற்கு 7.19ரூ அதிகம் (ரூ.4223368.15) — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br><br>வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 7.19ரூ அதிகமாக கொடுத்திருந்தார். மேலும் ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.80ரூ அதிகமாக (ரூ. 4129342.75) கொடுத்திருந்தார். தற்போது 2011–12ம் ஆண்டு விலைப்பட்டியலில் சுமார் 7 முதல் 8 சதவீதம் அதிகமாக உள்ளது. எனவே அதன் அடிப்படையில் பார்க்கும் போது வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.80ரூ அதிகமாக உள்ளதை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் கூடுதல் செலவினத்தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.**13/2011–12** | 405) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 19. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சிவன்கோவில் தெரு திருமணமண்டபத்தினை திருமதி. வேலம்மாள் என்பவர் உரிமம் பெற்று நடத்தி வருகிறார். அன்னார் பெற்று வந்த உரிமம் (3 ஆண்டுகள்) 31–3–2011ல் முடிவு பெறுவதால் அதன் உரிம காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து வழங்கக் கோரி அதற்கான கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ. 258055ல் 15 % உயர்வு செய்து 2,96,763/– ஐ செலுத்தியுள்ளார். எனவே 15% உயர்வு செய்து செலுத்தியுள்ள தொகையை ஏற்று அன்னாருக்கு மேற்படி உரிமத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து (2011–2014 மூன்றாண்டு தொகுப்பு) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். அ16/22829/03 | 406) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 20. இம்மாநகராட்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரத்திற்கான முழுமையான மேம்பாட்டு திட்டத்தில் (IDSMT) 1995ம் ஆண்டு முதல் 31–03–2011ம் தேதி வரையிலான சுழல் நிதியில் ரூ 20,34,688/– இருப்பதாகவும் முழுமையான திட்ட சாலைகள் மேம்பாட்டு பணிகள் போன்ற பணிகளுக்கு திட்ட செயலாக்கம் தயார் செய்து அனுப்பவும் இத்தொகைக்கு மேலான செலவினத் தொகையினை TUFIDCO உள்கட்டமைப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே இம்மாநகராட்சி முழுமையான திட்ட சாலைகளான ரதவீதிகளில் மேம்பாட்டு பணிகள் எடுத்து செய்யவும், அதற்கான மதிப்பீடு தொகை ரூ 86.80 லட்சத்திற்கு (ரூபாய் எண்பத்தாறு லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) மாமன்ற அனுமதி வேண்டப்படுடுகறது.<br><br>**அலுவலக குறிப்பு** –அனுமதிக்கலாம். கூடுதல் செலவினத்தை TUFIDCO உள்கட்டமைப்பு நிதியிலிருந்து பெறலாம்.<br><br>இ1/11502/2011 | 407) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 21. இம்மாநகராட்சி சத்திரம் தெரு அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தை திரு இ. அசோக்குமார் என்பவர் திருமண நிகழ்ச்சிக்காக 11–12–2010 மாலை முதல் 12–12–2010 இரவு வரை 1 1/2 நாள் வாடகைக்கு ஒதுக்கீடு செய்யக்கேகரி மாநகராட்சி கரூவூலத்தில் ரூ 33068/– ரசீது எண். 106253 நாள் 19–7–2010ல் செலுத்தியுள்ளார். ஆனால் அன்னாரது குடும்ப சூழ்நிலை காரணமாக திருமணம் தடை செய்யப்பட்டதாகவும் அதனால் தான் செலுத்திய தொகை ரூ 33068/–ஐ திரும்ப வழங்க கோரி மனு செய்துள்ளார். அன்னார் பதிவு செய்த தேதியில் (11–12–2010 மாலை முதல் 12–12–2010 இரவு வரை) திருமண மண்டபத்தில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. எனவே அன்னார் செலுத்திய தொகை ரூ 33068/–ஐ திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். அ16/11618/11 | 408) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 22. இம்மாநகராட்சிக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மாநகருக்கு வரும் குடிநீர் பிரதான 2 வது பைப் லைன் குழாயில் வாகைகுளம் அருகில் வெட்காளி அம்மன் பிளாட் கிழக்கு பகுதியில் உள்ள 32ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள தன்னோட்ட குடிநீர் குழாயான 600mm RCC குழாயில் சுமார் 500 மீட்டர் தூரத்திற்கு குழாய் உடைப்பு மற்றும் காலர் சேதமடைந்த நிலையில் உள்ளதால், மாநகருக்கு வரும் குடிநீரின் அளவு வெகுவாக குறைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படையும் நிலையில் உள்ளது. | 409) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட இடத்தில் பலமுறை சீரமைப்பு பணி மேற்கொண்டு சரி செய்ய இயலாத காரணத்தினால் பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பகுதியில் 500மீட்டர் தூரத்திற்கு சேதமடைந்த குழாய்களான 600mm RCC குழாய்களுக்கு பதில் 600mm MS குழாய்கள் மாற்றி அமைக்க தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு –** பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி குழாய் மாற்றியமைக்க ஏற்படும் செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் குடிநீர் இணைப்பு வைப்பு தொகையிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.<br><br>இ3/11614/2011 | |
| | 23. இம்மாநகராட்சிக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மாநகருக்கு வரும் குடிநீர் பிரதான 2 வது பைப் லைன் குழாயில் புதுக்கோட்டை பாலம் கிழக்கு பகுதியில் உள்ள 32ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள தன்னோட்ட குடிநீர் குழாயான 600mm RCC குழாயில் சுமார் 500 மீட்டர் தூரத்திற்கு குழாய் உடைப்பு மற்றும் காலர் சேதமடைந்த நிலையில் உள்ளதால், மாநகருக்கு வரும் குடிநீரின் அளவு வெகுவாக குறைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.<br><br>மேற்கண்ட இடத்தில் பலமுறை தற்காலிகமாக சீரமைப்பு பணி மேற்கொண்டும் சரி செய்ய இயலாத காரணத்தினால் பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பகுதியில் 500மீட்டர் தூரத்திற்கு சேதமடைந்த குழாய்களான 600mm RCC குழாய்களுக்கு பதில் 600mm MS குழாய்கள் மாற்றி அமைக்க தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி குழாய் மாற்றியமைக்க ஏற்படும் செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் குடிநீர் இணைப்பு வைப்பு தொகையிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.<br>இ3/11615/2011 | 410) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 24. இம்மாநகராட்சிக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மாநகருக்கு வரும் குடிநீர் பிரதான 2 வது பைப் லைன் குழாயில் வாகைக்குளம் அருகில் பெரியபாலம் மேற்கு பகுதியில் சுமார் 32 ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள தன்னோட்ட குடிநீர் குழாயான 600mm RCC குழாயில் சுமார் 500 மீட்டர் தூரத்திற்கு குழாய் உடைப்பு மற்றும் காலர் சேதமடைந்த நிலையில் உள்ளதால், மாநகருக்கு வரும் குடிநீரின் அளவு வெகுவாக குறைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படையும் நிலையில் உள்ளது.<br><br>எனவே பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பகுதியில் 500மீட்டர் தூரத்திற்கு சேதமடைந்த குழாய்களான 600mm RCC குழாய்களுக்கு பதில் 600mm MS குழாய்கள் மாற்றி அமைக்க தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 411) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு –** பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகத்தின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி குழாய் மாற்றியமைக்க ஏற்படும் செலவினம் ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் குடிநீர் இணைப்பு வைப்பு தொகையிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.<br>இ3/11613/2011 | |
| | 25. இம்மாநகராட்சி மொத்த வார்டுகள் 51ல் 20 வார்டுகள் மட்டும் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மண்டலம் I (10, 11, 12, 13, 14) மண்டலம் II (46, 47, 48, 49, 50) மண்டலம் III ( 19, 20, 29, 30, 31) மண்டலம் IV (41, 42, 44, 45, 51) தனியார் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள மன்றம் தனது தீர்மானம் எண் 220 நாள் 7–10–2010ல் அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>தற்போது இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் கடந்த ஏப்ரல் 2011 முதல் ஜுலை 2011 வரையில் மொத்தம் '26' பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் தற்போது மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வார்டு பகுதிகளில் துப்புரவு பணி மிகவும் பாதிக்கப்பட உள்ளது.<br><br>துப்புரவு பணியாளர்களின் காலிப் பணியிடங்களை நிரப்பி மாநகராட்சி மூலம் துப்புரவு பணிகள் மேற்கொண்டால் செலவினங்கள் தனியார் மூலம் மேற்கொள்வதை விட கூடுதலாகிறது என்பதாலும் வார்டு எண்கள் 1, 5, 35 ஆகிய வார்டு பகுதிகள் மக்கள் தொகை மற்றும் அதன் பரப்பளவினை கொண்டு தனியார் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்வதால் மாநகராட்சிக்கு செலவினம் குறைக்கப்படுவதை கருத்தில் கொண்டும் இந்த வார்டு பகுதிகளை தனியார் மூலம் பராமரிக்கலாம் என நகர் நல அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர்களின் பரிந்துரையினை ஏற்று மாநகரின் துப்புரவு பணி பாதிக்கா வண்ணம் அவசரம் அவசியம் கருதி மன்றம் ஏற்கனவே அனுமதியளித்துள்ள தனியார்களிடம் இந்த வார்டுகளை நடைமுறையிலுள்ள நிபந்தனைகளின்படி துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதியும் கூடுதல் செலவினத்திற்கும் கூடுதல் செலவினத் தொகை இம்மாநகராட்சி பொது நிதியில் செய்திடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>எச்1/10003/2010 | 412) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 26. இம்மாநகராட்சி பொது பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–05–2011ல் ஓய்வு பெற்றுள்ள திரு. எம். சுடலைமுத்து என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ. 12295/– மான்யம் ரூ 10000/– ஆகமொத்தம் ரூ.25255/–ஐ (ரூபாய் இருபத்து ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து மட்டும்) பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். சி4/5618/20 | 413) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

மாமன்றம்,தூத்துக்குடி
நாள் . 29–07–2011

மேயர்
மாமன்றம்,தூத்துக்குடி